ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 11.6 – மைந்நின்ற

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.6 – மைந்நின்ற

‡ மைந் நின்ற கருங்கடல் வாய் உலகின்றி ⋆
வானவரும் யாமும் எல்லாம் ⋆
நெய்ந் நின்ற சக்கரத்தன் திரு வயிற்றில் ⋆
நெடுங்காலம் கிடந்ததோரீர் ⋆
எந்நன்றி செய்தாரா ⋆
ஏதிலோர் தெய்வத்தை ஏத்துகின்றீர் ⋆
செய்ந்நன்றி குன்றேன்மின் ⋆
தொண்டர்காள் ! அண்டனையே ஏத்தீர்களே ॥ **11.6.1** ॥

நில்லாத பெரு வெள்ளம் ⋆
நெடு விசும்பின் மீதோடி நிமிர்ந்த காலம் ⋆
மல் ஆண்ட தடக் கையால் ⋆
பகிரண்டம் அகப்படுத்த காலத்து ⋆
அன்றெல்லாரும் அறியாரோ ⋆
எம்பெருமான் உண்டுமிழ்ந்த எச்சில் தேவர் ⋆
அல்லாதார் தாம் உளரே ⋆
அவன் அருளே உலகாவதறியீர்களே ॥ **11.6.2** ॥

நெற்றி மேல் கண்ணானும் ⋆
நிறை மொழி வாய் நான்முகனும் நீண்ட நால் வாய் ⋆
ஒற்றைக் கை வெண் பகட்டின் ஒருவனையும் ⋆
உள்ளிட்ட அமரரோடும் ⋆
வெற்றிப் போர்க் கடல் அரையன் ⋆

விழுங்காமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட ⋆
கொற்றப் போர் ஆழியான் ⋆
குணம் பரவாச் சிறு தொண்டர் கொடிய ஆறே ! ॥ **11.6.3** ॥

பனிப் பரவைத் திரை ததும்பப் ⋆
பார் எல்லாம் நெடுங்கடலே ஆன காலம் ⋆
இனிக் களைகண் இவர்க்கில்லை என்று ⋆
உலகம் ஏழினையும் ஊழில் வாங்கி ⋆
முனித் தலைவன் முழங்கொளி சேர் ⋆
திரு வயிற்றில் வைத்தும்மை உய்யக் கொண்ட ⋆
கனிக் களவத் திரு உருவத்தொருவனையே ⋆
கழல் தொழுமா கல்லீர்களே ॥ **11.6.4** ॥

பார் ஆரும் காணாமே ⋆
பரவை மா நெடுங்கடலே ஆன காலம் ⋆
ஆரானும் அவனுடைய திரு வயிற்றில் ⋆
நெடுங்காலம் கிடந்தது ⋆
உள்ளத்தோராத உணர்விலீர் ! ⋆
உணருதிரேல் உலகளந்த உம்பர் கோமான் ⋆
பேராளன் பேரான ⋆
பேர்கள் ஆயிரங்களுமே பேசீர்களே ॥ **11.6.5** ॥

பேய் இருக்கும் நெடு வெள்ளம் ⋆
பெரு விசும்பின் மீதோடிப் பெருகு காலம் ⋆
தாய் இருக்கும் வண்ணமே ⋆
உம்மைத் தன் வயிற்றிருத்தி உய்யக் கொண்டான் ⋆
போய் இருக்க மற்றிங்கோர் ⋆
புதுத் தெய்வம் கொண்டாடும் தொண்டீர் ⋆

பெற்ற தாய் இருக்க மணை வெந்நீர் ஆட்டுதிரோ ⋆
மாட்டாத தகவற்றீரே ! ॥ **11.6.6** ॥

மண் நாடும் விண் நாடும் ⋆
வானவரும் தானவரும் மற்றும் எல்லாம் ⋆
உண்ணாத பெரு வெள்ளம் ⋆
உண்ணாமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட ⋆
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் ⋆
கழல் சூடி ⋆
அவனை உள்ளத்தெண்ணாத மானிடத்தை ⋆
எண்ணாத போதெல்லாம் இனியவாறே ॥ **11.6.7** ॥

மறம் கிளர்ந்து கருங்கடல் நீர் ⋆
உரம் துரந்து பரந்தேறி அண்டத்தப்பால் ⋆
புறம் கிளர்ந்த காலத்துப் ⋆
பொன் உலகம் ஏழினையும் ஊழில் வாங்கி ⋆
அறம் கிளர்ந்த திரு வயிற்றின் ⋆
அகம் படியில் வைத்தும்மை உய்யக் கொண்ட ⋆
நிறம் கிளர்ந்த கருஞ்சோதி ⋆
நெடுந்தகையை நினையாதார் நீசர் தாமே ॥ **11.6.8** ॥

அண்டத்தின் முகடழுந்த ⋆
அலை முந்நீர்த் திரை ததும்ப ஆ ! ஆ ! என்று ⋆
தொண்டர்க்கும் அமரர்க்கும் ⋆
முனிவர்க்கும் தான் அருளி ⋆
உலகம் ஏழும் உண்டொத்த திரு வயிற்றின் ⋆
அகம் படியில் வைத்தும்மை உய்யக் கொண்ட ⋆

கொண்டற்கை மணி வண்ணன் ⋆
தண் குடந்தை நகர் பாடி ஆடீர்களே ॥ **11.6.9** ॥

‡ தேவரையும் அசுரரையும் ⋆
திசைகளையும் கடல்களையும் மற்றும் முற்றும் ⋆
யாவரையும் ஒழியாமே ⋆
எம்பெருமான் உண்டுமிழ்ந்ததறிந்து சொன்ன ⋆
கா வளரும் பொழில் மங்கைக் ⋆
கலிகன்றி ஒலி மாலை கற்று வல்லார் ⋆
பூ வளரும் திருமகளால் அருள் பெற்றுப் ⋆
பொன் உலகில் பொலிவர் தாமே ॥ **11.6.10** ॥

அடிவரவு — மைந்நின்ற நில்லாத நெற்றி பனி பாராரும் பேய் மண் மறம் அண்டத்தின் தேவரை நீள்நாகம்

மைந்நின்ற முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்